**DEPOSITION OF WITNESS**

**IN THE COURT OF THE ADDITIONAL DISTRICT JUDGE.**

**TIRUVANNAMALAI.**

**S.C. No.30/2024**

**PW7**

| | | |
|---|---|---|
| Name | : | ராமகிருஷ்ணன் |
| Father's Name | : | சக்கரவர்த்தி |
| Village | : | துறிஞ்சிகுப்பம் |
| Taluk/District | : | திருவண்ணாமலை |
| Caste | : | |
| Calling | : | |
| Religion | : | |
| Age | : | |

Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 of the day of 16.07.2025.

Accused present.

**முதல் விசாரணை**

நான் துறிஞ்சிகுப்பம் கிராமத்தில் வசித்து சென்ட்ரிங் வேலை செய்து வருகிறேன். இறந்துபோன மணிகண்டனை எனக்கு தெரியும் . ஆஜர் எதிரியை தெரியும். அவரை இறந்துபோன மணிகண்டனுடன் பலமுறை பார்த்துள்ளேன் . கடந்த 06.12.2022 அன்று காலை 9 மணியளவில் துறிஞ்சிகுப்பத்தில் இருந்து பூங்கொல்லைமேடு வழியாக போளூர் சென்று கொண்டிருந்தேன் . நானும் சுதாகரும் பூங்கொல்லைமேடு வழியாக போகும் போது பாலகிருஷ்ணன் வீட்டருகே 4 ,5 நபர்கள் நின்று கொண்டிருந்தார்கள். போளூர் காவல் நிலைய போலிசார் அங்கு இருந்தார்கள். பாலகிருஷ்ணன் வீட்டிற்கு முன் பகுதியில் இருந்த ரத்தம் உறைந்த மண்ணும் ரத்தம் உறையாக சாதாரண மண்ணும் போலிசார் மகசரில் கைப்பற்றினார்கள். அந்த மகசரில் நானும் , சுதாகரும் கையொப்பம் செய்தோம். அந்த கைப்பற்றுதல் மகசர் **அ.சா.ஆ. 5.** தற்போது நீதிமன்றத்தில் காண்பிக்கப்படும் அந்த

ரத்தம் தோய்ந்த மண் பொட்டலம் தான் அன்று போலிசார் கைப்பற்றியது . அது **அ.சா.பொ.2.** சாதாரண மண் பொட்டலம் **அ.சா.பொ. 3.** இது சம்மந்தமாக போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

இறந்துபோன மணிகண்டனின் தந்தை எங்கள் ஊரை சேர்ந்தவர்தான் . பாலகிருஷ்ணன் வீட்டிற்கு மேற்கே வடக்கு தெற்காக ஒரு வெள்ளக்குள ஓடை செல்கிறது என்றால் சரிதான் . அதில் எப்பொழும் தண்ணீர் செல்லும் என்றால் மழைக்காலத்தில் மட்டும் தண்ணீர் இருக்கும் . சம்பவம் நடந்த காலத்தில் அதில் தண்ணீர் ஓடிக்கொண்டிருந்தது. பாலகிருஷ்ணன் வீட்டிற்கு வெளிப்பகுதியிலும் அந்த ஓடைக்கும் இடையே சுமார் 50 அடி இருக்கும். பாலகிருஷ்ணன் வீட்டிற்கு செல்லவேண்டும் என்றால் அந்த ஓடையில் நடந்துதான் செல்லவேண்டும் . 06.12.2022 அன்று காலை அந்த இடத்திற்கு சென்றேன் . 06.12.2022- ற்கு முந்நாள் மழை பெய்ததா என்றால் எனக்கு தெரியாது நான் வேலைக்கு சென்றுவிட்டேன் . மணிகண்டனின் பிரேதத்தை வாங்க நான் செல்லவில்லை . மணிகண்டன் என் சித்தப்பா பையன். நான் காவல் நிலையத்திற்கு செல்லவில்லை . நான் சம்பவ இடத்திற்கு செல்லவில்லை என்றும் , அந்த இடத்தில் இருந்து போலிசார் ரத்தம் தோய்ந்த மண்ணையோ,சாதாரண மண்ணையோ கைப்பற்றவில்லை என்றோ, நான் மகசரில் எந்த கையொப்பமும் செய்யவில்லை என்றால் சரியல்ல . ஓடையில் இருக்கும் தண்ணீர் அந்த இடத்திற்கு செல்ல வாய்ப்பு இருப்பதால் அந்த இடத்தில் ரத்தம் உறையவோஅல்லது ரத்தம் உறைந்த மண் இருக்கவோ வாய்ப்பில்லை என்றால் சரியல்ல. நான் பொய் சாட்சி சொல்கிறேன் என்றால் சரியல்ல.

Taken down by me in Open Court read over of the witness and to acknowledged by him/her as correct.

**Sd/- B.C. Gopinath**
Additional District Judge,
Tiruvannamalai.